பொதுத்தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் துணை இயக்குநர் (மின் ஆளுமை)
செயல்முறைகள். சென்னை-6.

ஓ.மு.எண்.40064/டபிள்யு3/இ2/2023 நாள். .07.2023

பொருள் : - தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்கீழ் திரு.எஸ்.காளிராஜ் என்பார் - தகவல் கோரியது- சார்பு.

பார்வை : - திரு.எஸ்.காளிராஜ், த/பெ.சுப்பையா என்பாரின் மனு நாள்.07.07.2023

------

தூத்துக்குடி மாவட்டம், ஆத்திக்குளம், எண்.6/219, மேலத்தெரு, திரு.எஸ்.காளிராஜ், த/பெ.சுப்பையா என்பார் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் தகவல் கோரியுள்ளார்.

பெறப்பட்ட மனு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலருக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 உட்பிரிவு 6(3)-விதியின் கீழ் இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. வரிசை எண்.2-ற்கான விவரத்தினை மனுதாரருக்கு உரிய காலகெடுவிற்குள் தகவல் அளித்து விட்டு அதன் விவரத்தினை இவ்வாணையரகத்திற்கு அனுப்பி வைக்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**- பார்வையில் காணும் மனு

12/7/2023

பொதுத்தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
துணை இயக்குநர் (மின் ஆளுமை)

பெறுநர்
அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

**நகல்**
திரு.எஸ்.காளிராஜ்,
த/பெ.சுப்பையா,
எண்.6/219, மேலத்தெரு,
ஆத்திக்குளம்- 628 952,
தூத்துக்குடி மாவட்டம்.

RT 43046 4003

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005

அனுப்புநர் :




4 0 0 6 4
07.7.23

S. காளிராஜ்,
S/o. சுப்பையா,
6/219, மேலத்தெரு,
ஆத்திகுளம் - 628952.
கயத்தார் வழி,
தூத்துக்குடி மாவட்டம்.

பெறுநர் :

பொது தகவல் அலுவலர் அவர்கள்,
பள்ளிக்கல்வி இயக்ககம் (DSE)
D.P.I. வளாகம்,
சென்னை.

ஐயா,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் - 2005 – கீழ் தகவல் கோருதல் பணிந்து அனுப்புதல் சார்பு.

M.A., B.Ed வரலாறு முடித்து பட்டதாரி (சமூக அறிவியல்) ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் முதுகலை ஆசிரியர் பதவி உயர்விற்கான (Gross Major) M.A. பொருளாதாரம் படித்து முடித்துள்ளேன். முன்பு Gross Major படித்தால் பதவி உயர்வு பெறும் நிலை இருந்தது. தற்போது இளங்கலை மற்றும் முதுகலை இரண்டும் ஒரே பாடமாக இருந்தால் மட்டுமே பதவி உயர்வு பெறும் நிலை உள்ளது.

ஆகையால் நான் **M.A. (பொருளாதாரம்)** படித்த பின்பு மீண்டும் முதுகலை ஆசிரியராக பதவி உயர்வு பெற வேண்டும் என தற்போது இளங்கலை **B.A. (பொருளாதாரம்)** படித்து முடித்துள்ளேன்.

கீழ்க்காணும் கேள்விகளுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 கீழ் தகவல் அளிக்க ஆவண செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. நான் முதலில் **M.A. (பொருளாதாரம்)** அதன் பிறகு **B.A. (பொருளாதாரம்)** படித்து முடித்துள்ளதால் பதவி உயர்வு பெற தகுதியானதா என்பதனையும் அதற்குரிய அரசாணை நகலினை அனுப்பும் படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.
2. 2021 முதல் தற்போது வரை Gross Major (பொருளாதாரம்) பதவி உயர்வு சென்றவர்கள் தகவலை தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் உரிய கட்டணமாக ரூ.10-க்கான நீதிமன்ற வில்லை ஒட்டப்பட்டுள்ளது.

**இடம்:** ஆத்திகுளம்
**நாள் :** 03.07.2023.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
S. காளிராஜ்